சேலம் மாவட்டத்தில் ஊற்றுக் கிணறுகள்

* 438 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் சேலம் மாவட்டத்தில் ஊற்றுக் கிணறுகள் வெட்டும் திட்டம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவர் அவர்களே, இதைப்பற்றி பரிசிலனை செய்துதான் அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறதா அல்லது பரிசிலனை இல்லாமலேயே 'இல்லை' என்று பதிலளிக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஊற்றுக் கிணறு என்று சொல்லும்போது அதிலிருந்து நிறைய தண்ணீர் வரவேண்டும். தென்னாற்காடு ஜில்லாவில் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஊற்றுக் கிணறுகளில் போதுமான அளவு தண்ணீர் இருந்தால் ஆர்டிஸான் கிணறுகளுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கொல்லிமலை அடிவாரத்தில் அப்படிப்பட்ட ஊற்றுக் கிணறுகள் இருப்பதாக நண்பர்கள் சொல்லுகிறார்களே, அதைப்பற்றி பரிசிலனை செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் பரிசிலனை செய்யலாம்.

எஸ்.எஸ்.எல்.சி. பாடத் திட்டம்

* 439 கேள்வி.—திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்தியமைத்த எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை ஒட்டி 9 முதல் 11 வரையுள்ள வகுப்புகளுக்கான பாடத் திட்டத்தை நடுநிலைக் கல்வி போர்டு திருத்தி இறுதி செய்துள்ளதா ?

(இ) அதன் விவரங்கள் யாவை ?

(உ) திருத்தியமைத்த பாடத் திட்டம் எப்போது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) & (c) : Do not arise.

நாமக்கல் வட்டத்திற்கு முதியோர் பள்ளிகள்

* 440 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

[28th March 1964

(அ) 1964-ல் சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் முதியோர் பள்ளிகளை ஏற்படுத்தும் திட்டம் உண்டா?

(இ) ஆமெனில், அவைகள் எங்கெங்கு திறக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. PRIVILEGE MATTER RE ALLEGED BAD TREATMENT TO A MEMBER BY THE DIRECTOR OF HARIJAN WELFARE.

MR. SPEAKER : I hope the Hon. Chief Minister is ready with the necessary information with regard to the privilege matter raised by the hon. Member Sri V. Krishnamoorthy.

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று முன் தினம் கனம் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கிளப்பினார்கள். அது, ஹரிஜன நல இலாகா இயக்குனர் அவர்களிடம், தான் ஒரு மாணவன் ஸ்காலர்ஷிப் விஷயமாகப் போயிருந்தபோது, அவரை வெளியே போகச் சென்னார், அந்த முறையில் ஒரு உறுப்பினரை அவமதித்தார் என்ற உரிமைப் பிரச்னை. அப்போது நான் தங்களிடம், விவரங்கள் கேட்டுத் தெரிந்துகொண்டு கூறவேண்டியதைக் கூறுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அப்புறம் விவரங்கள் தெரிந்துகொண்டேன். விவரங்கள் பின் வருமாறு :—

பிற்பட்டவர்கள், ஹரிஜனங்கள் ஆகியவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்க முதலில் பணம் ஒதுக்கப்படுகிறது. அந்தப் பணமெல்லாம் செலவாகிவிடுகின்றது. ஒதுக்கப்பட்ட அளவுக்குத்தான் ஸ்காலர்ஷிப் கொடுக்க முடியும். ஆகையால் சில மாணவர்களுக்குக் கொடுக்க முடியாமல் போய் விடுகிறது. சில நாட்களுக்கு முன் எனது மதிப்புக்குரிய சகா, உள்நாட்டு அமைச்சர், சட்ட மன்ற உறுப்பினர்களே இன்னும் சில பேர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார்கள், அதற்காக இன்னும் கொஞ்சம் ஒதுக்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு நான் சம்மதித்து கொஞ்சம் பணம் ஒதுக்கப்பட்டது. அதன் பேரில் வேறு சில மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் அளிக்கப்பட்டது. அதில்தான் ஒரு மாணவருக்கு கிடைக்கவில்லை என்று கனம் உறுப்பினர் ஹரிஜன நல இலாகா டைரக்டரிடம் சென்றார். உறுப்பினர் அவர்களே வேறு சில மாணவர்களுக்கு சிபாரிசு செய்து, அமைச்சரும் அவர்களுக்குக் கொடுக்கும்படி சொல்லி அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு மாணவருக்கு வழங்கப்படவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு கனம் அங்கத்தினர் ஒருக்கால் அமைச்சரிடம் வந்து கேட்டிருக்கலாம், வந்து கேட்டு அவர்